உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சுந்தரர் புகழ்மாலை


சுதந்திர நூற்கருவூல அமைச்சர்

தி. கு. இ. நாராயணசாமி நாயடு அவர்கள்

தொகுத்தது



சாது அச்சுக்கூடம்,

இராயப்பேட்டை, சென்னை.

1930

அணா நான்கு.



உரிமை
செய்யப்பட்டது

183714

## நூல் கிடைக்கும் இடங்கள்

---

1. திருச்சிற்றம்பல இல்லம்,
   கிழக்கு மருதூர்,
   திருநாமநல்லூர் P. O.
   (via) விழுப்புரம் R. M. S.

2. முருகவேள் புத்தகசாலை,
   12, கணபதிமுதலி தெரு,
   இராயப்பேட்டை, சென்னை.

உலகத்து மக்கட்கு

மம்மர் அறுக்கும் மருந்தாம்

விச்சையை

எனக்குக் கொடுப்பதில்

கண்ணுங் கருத்துமாயிருந்து

அம்பொன்மணி நூலிழந்த நாள்முதல்

அருளோடு என்னைத் தாங்கித்

'தாயேயாகி வளர்த்த'

திருவாட்டி

**தாய் அம்மையார்**

நினைவுக்குரியது இந்நூல்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சுந்தரர் புகழ்மாலை

## திருவிசைப்பா

### (பூந்துருத்தி நம்பிகாடநம்பி)

களையா வுடலோடு சேரமா னாரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி மூவாயி ரவரொடும்
அளையா விளையாடும் அம்பலநின் னாடரங்கே. க

### (திருவாலியமுதனார்)

நெடிய சமணு மறைசாக் கியரு நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோ ரடையாத் தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
அடிக ளவரை யாரூர் நம்பி யவர்கள் இசைபாடக்
கொடியும் விடையும் உடைய கோலக் குழக னாடுமே. உ

## திருத்தொண்டர் திருவந்தாதி

### (நம்பியாண்டார்நம்பி)

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென் றங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி யெனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செயெனப்பெற்றவன்மூரல்தேன்
ஒழுகு மலரினற் றாரெம் பிரான்நம்பி யாரூரனே. க

அருட்டுறை யத்தர்க் கடிமைப்பட் டேனினி யல்லனென்னும்
பொருட்டுறை யாவதென் னேயென்ன வல்லவன் பூங்குவளை
இருட்டுறை நீர்வயல் நாவற்ப திக்கும்பி ரானண்டந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே. உ

நிதியார் துருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றிடென்று
துதியா அருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர்கோ னென்னு நற்றவனே. ௩

நந்திக்கும் நம்பெரு மாற்கும்நல் லாரூரின் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ்ப் பாடிப் படர்புனலில்
சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப்பவன்பெயர்வன்தொண்டனென்பரிவ்வையகத்தே.

துணையும் அளவுமில் லாதவன் தன்னரு ளே துணையாக்
கணையுங் கதிர்நெடு வேலுங் கறுத்த கயலிணையும்
பிணையு நிகர்த்தகட் சங்கிலி பேரமைத் தோளிரண்டும்
அணையு மவன்திரு ஆரூர னாகின்ற அற்புதனே. ௫

கூற்றுக் கெவனோ புகல்திரு ஆரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலு மின்னடைக் காயு மிடுதருமக்
கோற்றொத்துகூன னுங்கூன்போய்க்குருட னுங்கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே. ௬

பல்லவை செங்கதி ரோனைப் பறித்தவன் பாதம்புகழ்
சொல்லவன் தென்புக லூரரன் பாற்றுய்ய செம்பொன்கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் றன்பதி நாவலூ ராகின்ற நன்னகரே. ௭

கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக் குயிரன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவியவி நாசியை வேடர்சுற்றம்

படுத்தான் திருமுரு கன்பூண் டியினிற் பராபரத்தேன்
மடுத்தா னவனென்பர் வன்றொண்ட னாகின்ற மாதவனே.

தருமகட் பேசினோன் வீயவே நூல்போன சங்கிலிபால்
புகுமணக் காதலினால் ஒற்றி யூருறை புண்ணியன்றன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு ளாலிவ் வியனுலகம்
நகும்வழக் கேநன்மை யாப்புணர்ந் தான்நாவ லூரரசே. ௯

செழுநீர் வயன்முது குன்றினிற் செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கைய னீந்தபொன் னாங்குக்கொள் ளாதுவந்தப்
பொழில்நீ டருதிரு வாரூரில் வாசியும் பொன்னுங் கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு ஆரூர னென்றுநாங் கேட்பதுவே. ௧௦

ஞான ஆரூரரைச் சேரரை யல்லது நாமறியோ
மானவ வாக்கை யொடும்புக் கவரை வளரொளிப்பூண்
வானவ ராலு மருவற் கரிய வடகயிலைக்
கோனவன்கோயிற்பெருந் தவத்தோர் தங்கள் கூட்டத்திலே.

## திருத்தொண்டர் புராணம்

### (சேக்கிழார்)

உம்பர்நா யகரடியார் பேருவகை தாமெய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்
தம்பிரான் தோழரவர் தாமொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள் திருத் தொண்டேத்த லுறுகின்றேன். ௧

மலர்மிசை அயனுமாலுங் காணுதற் கரியவள்ளல்
பலர்புகழ் வெண்ணெய்நல்லூ ராவணப் பழைமைகாட்டி
உலகுய்ய ஆண்டுகொள்ளப் பெற்றவர் பாதமுன்னித்
தலைமிசை வைத்துவாழுந் தலைமைநந் தலைமையாகும். ௨

தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக் கூத்தர் தம்மைக், காதுகொள் குழைகள் வீசுங் கதிர்நில விருள்கால் சீப்ப, மாதுகொள் புலவி நீக்க மனையிடை யிருகாற் செல லத், தூதுகொள் பவரா நம்மைத் தொழும்புகொண் டுரி மைக் கொள்வார். ௫

நேச நிறைந்த உள்ளத்தால் நீல நிறைந்த மணிகண் டத், தீச னடியார் பெருமையினை எல்லா உயிருந் தொழ எடுத்துத், தேச முய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன், வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம். ௬

நாட்டா ரறிய முன்னாளி னன்று ளூலந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் தன்னைப்புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கண் தனிமா முதலை வாய்நின்று
மீட்டார் கழல்கள் நினைவாரை மீளா வழியின் மீட்பனவே.

பணையுந் தடமும் புடைசூழும் ஒற்றி யூரிற் பாகத் தோர், துணையுந் தாமும் பிரியாதார் தோழத் தம்பி ரானா ரை, இணையுங் கொள்கைச் சங்கிலியா ரெழின்மென் பணைத் தோ ளெய்துவிக்க, அணையு மொருவர் சரணமே யரண மாக அடைந்தோமே. ௮

தேனுங்குழலும் பிழைத்ததிருமொழியாள்புலவி தீர்க்கமதி
தானும்பணியும்பகைதீர்க்குஞ் சடையார் தூது தருந்திருநாட்
கூனுங் குருடுந் தீர்த்தேவல் கொள்வார் குலவு மலர்ப்பாதம்
யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்குகூன்.

உளத்திலொரு துளக்கமிலோம் உலகுய்ய இருண்ட திருக்
களத்துமுது குன்றர்தரு கனகமாற் றினிலிட்டு
வளத்தின்மலிந் தேழுலகும் வணங்குபெருந் திருவாரூர்க்
குளத்திலெடுத்தார்வினையின் குழிவாய்நின் றெனையெடுத்தார்.

செறிவுண் டென்று திருத்தொண்டிற் சிந்தை செல்லும் பயனுக்குக், குறியுண் டொன்று இலுங்குறையோன் றில்லோ நிறையுங் கருணையினால், வெறியுண் சோலைத் திருமுருகன் பூண்டி வேடர் வழிபறிக்கப், பறியுண் டவரெம் பழவினைவேர் பறிப்பா ரென்னும் பற்றாலே. ௬

மேவரிய பெருந்தவம்யான் முன்புவிளைத் தனவென்னோ
யாவதுமோர் பொருளல்லா வென்மனத்து மன்றியே
காவலர்கா வலர்பெருகு நதிகிழிய வழிநடந்த
சேவடிப்போ தெப்போதுஞ் சென்னியினு மலர்ந்தனவால்.

செற்றார்தம் புரமெரித்த சிலையார் செல்வத்
திருமுருகன் பூண்டியினிற் செல்லும் போதிற்
சுற்றாருஞ் சிலைவேடர் கவர்ந்து கொண்ட
தொகுநிதியின் பரப்பெல்லாஞ் சுமந்து கொண்டு
முற்றாத முலையுமையாள் பாகன் பூத
முதற்கணமே யுடன்செல்ல முடியாப் பேறு
பெற்றார்தங் கழல்பரவ அடியேன் முன்னைப்
பிறவியினிற் செய்ததவம் பெரிய வாமே. ௧௧

---

தம்பி ரானைத் தோழமைகொண்
டருளித் தமது தடம்புயஞ்சேர்
கொம்ப னார்பா லொருதூது
செல்ல ஏவிக் கொண்டருளும்
எம்பி ரானைச் சேரமான்
பெருமா ளிணையில் துணைவரால்
நம்பி யாரூ ரரைப்பயந்தார்
ஞால மெல்லாங் குடிவாழ. ௧௨

—சடையநாயனார் புராணம்.

ஒழியாப் பெருமைச் சடையனார்
உரிமைச் செல்வத் திருமணியார்
அழியாப் புரங்க ளெய்தழித்தார்
ஆண்ட நம்பி தனைப்பயந்தார்
இழியாக் குலத்தின் இசைஞானிப்
பிராட்டி யாரை யென்சிறுபுன்
மொழியாற் புகழ முடியுமோ
முடியா தேவர்க்கு முடியாதால். சரு

—இசைஞானியார் புராணம்.

## திருத்தொண்டர் புராணசாரம்

### (உமாபதி சிவாசாரியார்)

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாராய்
மண்புகழ அருட்டுறையான் ஓலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய ஆரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோள் நயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே. க

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பில்தனித் தூதுவந்தா றாடு கீறி
யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே. உ

## நால்வர் நான்மணிமாலை

### (துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்)

படியிலா நின்பாட்டி லாரூர
நணிவிருப்பன் பரம னென்ப
தடியனே னறிந்தனன்வான் றொழுமீசன்
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகள்தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே. க

அறிந்து செல்வம் உடையானும்
அளகைப் பதியாற் றோழமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானும்
ஒருவன் வேண்டு மெனவிருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே. உ

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற் கூற்றுவனால்
ஓங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையில்
உமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டஅருட் கடலே. ௩

நோக்குறு நுதலோன் நின்னிடை விருப்பால்
நூற்பக வன்ன நுண் மருங்குல்
வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றன னென்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டதே துக்குநீ புகலாய்
காக்கரு முதலை விழுங்கிய மதலை
கான்றிடத் தோன்றுநா வலனே. சா

போத முண்ட பிள்ளை யென்பு பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க மகனைநீ யழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ னக்கி யம்ப வேண்டுமே. ரு

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்ப ருங்கயி லாயம டைந்தமை நின்று காண்குறவே
எனக்கு வந்துறு மோமக வென்றழு கின்றநா ளலைபால்
தனித்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு தம்பி ரானலனே. சு

அரசன்பரிமேல்வரநெடுநல் யானையெருத்தத்தமர்ந்துபோய்
வரதன்கைலை மலையடைந்த மணியே மணிநீரிடுபசும் பொன்
திரைசங்கெறியுங் குளத்துவரச்செங்கற்செம்பொனுப்பாடும்
பரிசின்றெனக்குன்செம்பவளத்திருவாய்மலர்ந்து பகர்வாயே.

பாவாய்ப் பொழிந்த வானமுதப் பவளத் திருவாய் நம்பிநீ, சேவாய்ப் பொருதுந் தருமமுடைத் தேவன் மலைக்குப் போம்பொழுது, காவாய்ப் பயந்த தடக்கைமலர்க் கழறிற் றறிவார் கடாவிவரு, மாவாய்ப் பிறக்கக் கிடையாதே மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே. அ

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனும்

அல்லுநன் பகலு நீங்கா தவன்மகி முடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்பன் நம்பியா ரூரன்தானே. ௯

பெருமிழலைக் குறும்பரேனும் பரம யோகி
பெரிதுவந்துன் திருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றா னென்றால்
விளங்கிழையா ரிருவரொடு முயங்க லாமோ
உரைமதினின் றனைவெறுப்ப தென்கொல் நின்னை
யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயில்
சுரர்முனிவர் பரவலுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோ யறமுதல்நால் வகைசெய் தோயே.

## சோமேசர் முதுமொழி வெண்பா

### (சிவஞான சுவாமிகள்)

வேதியனா ளாமோவென் றெள்ளாது வெண்ணெய் நல்லூர்ச்
சோதிவழக் கேபுகழ்ந்தார் சோமேசா—வோதிற்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி. ௧

காம மிகவுழந்துந் தூதைக் கடிந்துவிட்டாள்
சோம னுதற்பரவை சோமேசா—வாமே
கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில். ௨

கொண்ட பரவை கொடும்புலவி யெல்லாம்வன்
றொண்டர்க்குப் பேரழகே சோமேசா—தண்டா
நலத்தகை நல்லவர்க் கேளர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து. ௩

காயும் புலவியில்வன் றொண்டர் கடைப்பட்டுத்
தோயுமின்பின் மேலானார் சோமேசா—ஆயுங்கால்
ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னுங்
கூடலிற் காணப் படும். ௪

## அருட்பா

### (இராமலிங்க சுவாமிகள்)

மதியணிசெஞ் சடைக்கனியை மன்றுள்நடம் புரிமருந்தைத்
துதியணிசெஞ்சுவைப்பொருளிற்சொன்மாலைதொடுத்தருளி
விதியணிமா மறைநெறியு மெய்ந்நிலையா கமநெறியும்
வதியணிந்துவிளங்கவைத்தவன்றொண்டப்பெருந்தகையே.

நீற்றிலிட்ட நிலையாப்புன் னெறியுடையார் தமைக்கூடிச்
சேற்றிலிட்ட கம்பமெனத் தியங்குற்றேன் றனையாளாய்
ஏற்றிலிட்ட திருவடியை யெண்ணியரும் பொன்னைலாம்
ஆற்றிலிட்டுக்குளத்தெடுத்த அருட்டலைமைப்பெருந்தகையே.

இலைக்குளநீரழைத்ததனில் இடங்கருறஅழைத்ததன்வாய்த்
தலைக்குதலை மதலையுயிர் தழைப்பஅழைத் தருளியநின்
கலைக்கும்வட கலையின்முதற் கலைக்குமுறு கணக்குயர்பொன்
மலைக்குமணு நிலைக்குமுறு வன்றொண்டப் பெருந்தகையே.

வேதமுதற் கலைகளெலாம் விரைந்துவிரைந் தனந்தமுறை
ஓதவவைக் கணுத்துணையும் உணர்வரிதாம் எம்பெருமான்
பாதமலர் நினதுதிருப் பணிமுடிமேற் படப்புரிந்த
மாதவம்யாதுரைத்தருளாய்வன்றொண்டப்பெருந்தகையே.

ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமாயென்றுமுன்நீ சொன்னபெருஞ்சொற்பொருளை
ஆழநினைத் திடிலடியேன் அருங்கரணங் கரைந்துகரைந்
தூழியிலின் புறுவதுகாண் உயர்கருணைப் பெருந்தகையே.

வான்காண இந்திரனும் மாலயனும் மாதவருந்
தான்காண இறையருளால் தனித்தவள யானையின்மேல்
கோன்காண எழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே. சூ

தேன்படிக்கும்அமுதாமுன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாவொன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிருந்
தான்படிக்கும்அநுபவங்காண் தனிக்கருணைப்பெருந்தகையே.

இன்பாட்டுத்தொழிற்பொதுவிலியற்றுகின்றஎம்பெருமான்
உன்பாட்டுக் குவப்புறல்போல் ஊர்பாட்டுக் குவந்திலனென்
றென்பாட்டுக்கிசைப்பினுமென்னிடும்பாட்டுக்கரணமெலாம்
அன்பாட்டுக்கிசைவதுகாண் அருட்பாட்டுப்பெருந்தகையே.

பரம்பரமாந் துரியமெனும் பதத்திருந்த பரம்பொருளை
உரம்பெறத்தோ ழமைகொண்ட வுன்பெருமை தனைமதித்து
வரம்பெறநல் தெய்வமெலாம் வந்திக்கு மென்றாலன்
தரம்பெறவென்புகல்வேனுன் தனித்தலைமைப்பெருந்தகையே.

பேரூரும் பரவைமனப் பிணக்கறஎம் பெருமானை
ஊரூரும் பலபுகல வோரிரவில் தூதனெனத்
தேரூருந் திருவாரூர்த் தெருவுதொறு நடப்பித்தாய்
ஆரூர நின்பெருமை யயன்மாலு மளப்பரிதே. ௧௦

—ஆளுடைநம்பிகள் அருண்மாலை.

எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார்
தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய்-வெம்பனையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப் பெயர்நீண்ட மால். ௧௧

முன்மணத்திற் சுந்தரரை முன்வலுவிற் கொண்டதுபோல்
என்மணத்தில் நீவந் திடாவிடினும் - நின்கணத்தில்
ஒன்று மொருகணம்வந் துற்றழைக்கிற் செய்ததன்றி
இன்று மொருமணஞ்செய் வேன். ௧௨

—சிவநேச வெண்பா.

அடுத்தார் தமையென்று மேலோர் விடார்க ளவர்க்குப்பிச்சை, எடுத்தா யினுமிடு வார்களென் பாரதற் கேற்கச்சொற்பூத், தொடுத்தா ரொருவர்க்குக் கச்சூரி லேபிச்சைச் சோறெடுத்துக், கொடுத்தாய்நின் பேரருளென் சொல்லு கேனெண் குணக்குன்றமே. ௧௪

சடையவ நீமுன் தடுத்தாண்ட நம்பிக்குச் சற்றெனினுங்
கடையவ னேன்செயுங் கைம்மா றறிந்திலன் கால்வருந்தி
நடையுற நின்னைப் பரவைதன் பாங்கர் நடத்தியன்பர்
இடைவரு முன்ற னிரக்கத்தைத் தான்வெளி யிட்டதற்கே.

—திருவருள் முறையீடு.

பைச்சூ ரரவப் படநடத் தானயன் பறபலநாள்
எய்ச்சூர் தவஞ்செய் யினுங்கிடை யாப்பத மேய்ந்துமண்மேல்
வைச்சூரன்வன்றொண்டன்சுந்தரனென்னுநம்வள்ளலுக்குக்
கச்சூரிற் சோறிரந் தூட்டின ராலெங் கடவுளரே. ௧௫

—திருவருள் வழக்கவிளக்கம்.

அண்மை யாகுஞ்சுந் தரர்க்கன்று கச்சூ ராலக் கோயிலிற் சோறிரந் தளித்த, வண்மை கேட்டிங்கு வந்தடைந் தேற்றால் வாய்தி றந்தொரு வார்த்தையுஞ் சொல்லீர், திண்மை சேர்திரு மால்விடை யூர்வீர் தேவ ரீருக்குச் சிறுமையு முண்டோ, உண்மை யானுமை யன்றிமற் றறியேன் ஒங்கு சீரொற்றி யூருடை யீரே. ௧௬

—கொடைமடப் புகழ்ச்சி.

வண்மை பேசிய வன்றொண்டர் பொருட்டாய்
வழக்குப் பேசிய வள்ளல் நீரன்றே
இன்மை யாளர்போல் வலிய வந்திடினும்
ஏழை யாமிவ னென்றொழித் திட்டால்

தன்மை யன்றது தருமமு மன்றல்
தமியனே னின்னுஞ் சாற்றுவ தென்னே
பொன்மை யஞ்சடை யீரோற்றி யுடையீர்
பொய்ய னென்னில்யான் போம்வழி யெதுவோ.

—திருவிண்ணப்பம்.

மாலை யொன்றுதோட் சுந்தரப் பெருமான்
மணத்திற் சென்றவண் வழக்கிட்ட தெனவே
ஓலை யொன்றுநீர் காட்டுதல் வேண்டாம்
உவந்து தொண்டனென் றுரைப்பிரே லென்னை
வேலை யொன்றல மிகப்பல வெனினும்
வெறுப்பிலா துளம் வியந்துசெய் குவன்காண்
சோலை யொன்றுசீ ரொற்றியூ ருடையீர்
தூய மால்விடைத் துவசத்தி னீரே. கஅ

—கொடிவிண்ணப்பம்.

## கந்தபுராணம்

வறந்திடு பொய்கைமுன் னிரம்ப மற்றவண்
உறைந்திடு முதலைவந் துதிப்ப அன்னதால்
இறந்திடு மகன்வளர்ந் தெய்தப் பாடலொன்
றறைந்திடு சுந்தர னடிகள் போற்றுவாம். சு

## உபதேசகாண்டம்

உரவு மென்னுளத் தறிகடிந் தொருவல தாகி
விரவு முத்தமிழ் மும்மதச் செருக்கொடு மேவுந்
தரவ ருங்களி மீக்கொளச் சங்கிலி யகற்றிப்
பரவை யிற்படிந் தாடுறு மொருதனிப் பகடு. உ

## அருணகிரி புராணம்

வடகயிலை மலைபிரிந்து வந்துதித்திம் மண்டலத்தெங்
கடவுள்தகைந் தாட்கொளலுங் கட்டுரைத்துப் பதிகமவன்

அடிநிழலே யடைந்தாரை யறிவித்தே யெமக்கிந்தப்
படிமுழுதும் புகழ்திறவும் ஆரூரர் பதம்பணிவாம். ௩

## திருவிளையாடற் புராணம்

அரவக லல்கு லார்பால் ஆசைநீத் தவர்க்கே வீடு
தருவமென் றளவில் வேதஞ் சாற்றிய தலைவன் தன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான் கழுதுகண் படுக்கும் பானாள்
இரவினில்தூதுகொண்டோன்இணையடிமுடிமேல்வைப்பாம்.

## சேது புராணம்

தாதுகொண்ட மலர்ச்சுரியற் பரவை யென்பாள்
தனத்துணைமேன் மயற்குளிரின் தளர்வு தீர
வேதுகொண்டு விழைவுநெறி விரும்பி மாலும்
விரிஞ்சனுமுன் தொடராத வெளியை யாரும்
யாதுகொண்டு மறிவரிதா யெங்கு மான
இரும்பொருளை நெருங்குமிரு ளிரவின் மீளத்
தூதுகொண்டார் தமையெமையாட் கொள்வீ ரென்று
சொல்லியவர் பதம்புல்லித் தொழுதல் செய்வாம். ௫

## திருப்பரங்கிரி புராணம்

பரவைதனக்குத்தூதுரையாய்பரமாவெனவோர்வேதியனாய்
அரியு மயனு மறியாத அடியும் முடியும் பரவைமனை
மருவும் வாயிற் படிகாண வந்து திரும்பும் வலக்கையிற்
பரசு தரனை யெடுத்ததமிழ் பகர்சுந் தரனைப் பணிவாமே. ௬

## திருவாரூர்ப் புராணம்

ஆழி மாகடன் ஞாயி றணைந்தெனச்
சூழி வெங்களி றூர்ந்து சுரர்தொழ
வாழி வேதண்டம் வந்தருள் தம்பிரான்
தோழன் சேவடி சென்னியிற் சூட்டுவாம். ௭

## இலிங்க புராணம்

விதலையுற் றழுத தந்தைதாய் மகிழ
விரிதிரைப் புனலிடை வாழும்
முதலைவாய்க் கொண்டு தன்னகட் டொடுக்கு
முகிழ்நகைச் செய்யமென் கனிவாய்
மதலையைக் கரைவாய்த் தந்திடப் பரவை
மாகட லமுதினிற் கனிந்த
குதலையங் கிளவி பங்கனை வழுத்துங்
குரிசிலைப் பரவுதல் செய்வாம். அ

## பிரமோத்தரகாண்டம்

தாது நிறைக்கும் பசுந்துளபத்
தாமத் தோனுஞ் சரோருகச்செம்
போதி னகத்துச் சகமீன்ற
புத்தேள் தானும் அறியானை
மாதி னிடத்தின் முனிவொழிய
ஆரூர்ச் செம்பொன் மணிமறுகில்
தூது நடத்துங் கவிராசன்
துணைத்தாட் கமலந் தொழுதிடுவாம். கூ

## கூர்ம புராணம்

உரவுநீர்த் திரைக்கடலின் மலரயனோ
டுலகனைத்தும் உந்தி பூத்த
கரியமால் வெண்கேழல் உருவாகித்
தனித்தேடி யின்னுங் காணா
முருகுலாந் தாமரைத்தாள் சிவப்பூப
புரமெரித்த முறுவ லண்ணற்
பரவைபால் தூதேகப் பணித்தநா
வலன்மலர்த் தாள் பணிதல் செய்வாம். கo

183714
சென்னை-600 008

## காசிகாண்டம்

கதமெரி நேமி தூண்டிக் காரங்கவர் குரவன் ஈன்ற
மதலையை யழைத்த செங்கண் மாலென வருந்து றுமல்
அதிர்கட லமுத மென்ன அருந்தமிழ்ப் பதிகம் பாடி
முதலைவாய்ப்பிள்ளை தந்தமுதல்வனைவழுத்தல்செய்வாம்.

## வாயுசங்கிதை

மகத்தில் வாழ்சனி யாயினை யென்றுவான்
பகைத்த மூவெயில் செற்றவற் பாடியே
முகத்திற் கண்ணும் முளைத்தெழு ஞானமாம்
அகத்திற் கண்ணும் அடைந்தவற் போற்றுவாம். கஉ

## மச்ச புராணம்

மாதுயரப் பவக்கடலை யொழித்தடிய
ரிடத்துறைபு மழுவ லாளன்
மீதுசெழுந் தமிழ்மாலை பாடியுளத்
துறுமாலை விரைசேர் கஞ்சப்
போதுநிகர் பதம்வருந்தப் பரவைமனைப்
புறத்தணைந்து புகல்வீ ரென்று
தூதுசெலப் பணித்தருளுஞ் சுந்தரர்செந்
தளிர்த்துணைத்தாள் தொழுதல் செய்வாம். கங

## சங்கரநாராயணர்கோயிற் புராணம்

ஏனமாய் மாயோன் வேலை யிருநிலங் கீண்டுங் காணத்
தேனவிழ் கமல மன்ன சேவடி படியில் தோய
நானவார் குழலி பங்கி னுதனைத் தூது விட்ட
வானுலாம்பொழில்சூழ்நாவன்மன்னனை வணங்கல்செய்வாம்.

## திருக்கூவப் புராணம்

கன்று காமங் கழன்றிலர் தம்முரு
வென்று மோர்வரி தென்றிருப் போன்றனை

அன்று தூதுவ ஞக அரிவைபாற்
சென்று வாவென்ற தீரனை வாழ்த்துவாம். கரு

## திருவையாற்றுப் புராணம்

அத்தியுரித் தருளியேனை யாளியையென் அம்மானைச்
சித்திரமா தங்கனைச்செந் தீப்புலியைப் போயேற்றைப்
பத்திவலை யால்வளைத்துப் பணியுந்தொண் டாற்பிடித்த
நத்திலகும் வயல்நாவல் நம்பிதிருப் பதம்போற்றி. கசு

## நல்லூர்ப் புராணம்

வற்ப டைத்து வருமுலை மாதுவாழ்
இற்ப டைத்த இடம்பிறி தின்றெனச்
செற்ப டைத்த செழும்பொழிற் குண்டையூர்
நெற்ப டைத்தவன் தன்னை நினைகுவாம். கஎ

## சீகாளத்தி புராணம்

மாத ரிற்கண் மழுவலத் தேந்திய
ஆதி யைத்திரு மாலும் அறிகலாப்
பாத முற்றுஞ் சிவந்திடப் பண்டொர்நாள்
தூது விட்ட புலவற் றொழுவமால். கஅ

## திருக்கழுக்குன்றப் புராணம்

வழிவிடுத்த தொருநதியொண் பொன்கொணர்ந்த
தோராறு வரும்பொன் வாங்கிக்
கழிகொடுத்த தொருபொய்கை யளித்ததொரு
கயங்கரவு கரந்த சேயை
மொழிவசத்திற் கவைபோலிப் பரவையிணங்
குவதரிது முதல்வா வென்று
விழிதரித்தும் அரிகாணாப் பாதனைத்தூ
தேவினனை விழைந்து வாழ்வாம். கசு

### செவ்வந்திப் புராணம்

தீங்கும் பெருமா நிலத்திடருந்
தீரத் தீரத் திரைக்கடலில்
தூங்கும் பெருமா னுடன்வேதன்
துதிக்கும் படிக்குச் சுடர்க்கிரியாய்
ஓங்கும் பெருமாள் புகழ்பரவி
ஓரா யிரம்பொன் ஒருமொழிக்கு
வாங்கும் பெருமாள் சவுந்தரியப்
பெருமாள் பதத்தை வணங்கிடுவாம். உ௦

### திருவெண்காட்டுப் புராணம்

இருமுதலை யடைந்துநரை முடியசைய ஆவணமொன் றேந்திப் போந்த, ஒருமுதலை நவநீத புரியானை வழக் கேற்றி யுரைத்த கோவை, அருமுதலை குழவிதர மறை யொழுகுங் கனிவாயா லமுதப் பாடல், தருமுதலை யடி பணிந்து கருமுதலை வேரினொடுந் தள்ளு வோமே. உக

### திருவாவடுதுறைப் புராணம்

மனைப்பாச மகற்றஅன்று வந்துவழக்
குரைத்தாண்ட வரதர் தம்மைத்
தினைப்போதிற் பரவையிடத் தெனைக்கூட்டும்
எனத்தூது செலுத்தி வாழ்ந்து
வினைப்போகங் கடந்ததவ முனிவரெதிர்
கொளக்கரிமேல் வெள்ளி வெற்பிற்
பனைத்தாரோ னுடன்போன பாவலன்பொன்
அடிக்கமலம் பரவு வாமே. உஉ

### காஞ்சிப் புராணம்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லாளன் எல்லா முய்யப்

பெருமணச்சேர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமா ளென்றுந்
திருமணக்கோ லப்பெருமாள் மறைப்பெருமாள்
எமதுகுல தெய்வ மாமால். உங

## பேரூர்ப் புராணம்

ஆடு பாம்பணிந் தம்பலத் தாடிய அழகன்
பாடு பாப்பல பகர்ந்துமற் றிம்மையிற் பயனுங்
கூடு மேலையிற் பயனுங்கோ தனைத்தையும் ஒருவும்
வீடும் வாங்கும்வா ணிகத்துறு விரகனை வியப்பாம். உச

## திருவானைக்காப் புராணம்

அடிமை யானவர்க் கருளேபுந் தன்னைபு முயிரிற்
படியி லாவகை யளிப்பது பாருளோ ரறிய
வடிவின் மாண்டவ ளொருத்திதா தெனவிறை வழங்க
நொடியின்மாலைசெய்வன்றொண்டரடிமலர் நுவல்வாம். உரு

## பூவாளூர்ப் புராணம்

நீடியதண் கயிலாயத் தாடியிற்ற னிமலவுரு நிழற்ற ஆங்கே, கூடிவரும் பெருங்கிழமை குறித்துமறு பிறப்பிடத் தங் குழகன் முன்னின், றாடியபெண் டகைதுனிதீர்த் துழி தருதோ முமைபருள வுவப்பாற் பெற்றுப், பாடியெனை யாண்டமுனைப் பாடிவள நாடனையே பாடி வாழ்வாம். உசு

## திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம்

புண்ணியம் பொலிந்த கைலைமால் வரையிற் காட்சியிற் புணரிரு மடவார், நண்ணவிவ் வுலகின் மெய்புறு போக நயக்குநாள் நனி துனி தொலைய, அண்ணலே பலகால் தூதினி லாட வவ்வருட் கலப்பினுல் வாய்ந்த, வெண்ணெயி லாண்ட நாவலூர் நம்பி விரைமலர்ச் சேவடி பணிவாம். உஎ

## உத்தரகோசமங்கைப் புராணம்

அனைத்துலகும் பணிகேட்பத் தனிமுதன்மை
பூண்டுறையும் அலகில் சோதி
கனைத்திருமு குரற்றிரைந்த கவுள்*கொசிநோக்
கசைநடையிற் கழிமூப் பெய்தி
எனக்கிவன்மற் றடியன்விலைக் கலங்காண்மின்
அந்தணிரென் றீர்த்தாட் கொண்ட
வினைப்பகைஞர் நாவலூர் நாவலர்தாள்
துணைதுணையா வேட்டு மன்றே. உஅ

## கடம்பர்கோயிற் புராணம்

பழுதறத் துறந்து ளோர்க்கே பரமருள் பரனைப் பாவால்
தொழுதொரு பரவை தன்பால் தூதிடைச் செலுத்தித் தூய
மழவினை முதலை வாயின் வரவழைத் தந்த ணளன்
அழுகைதீர்த் தருளு மெங்கோ னடியவர்க் கடிமைசெய்வாம்.

## சிவராத்திரி புராணம்

மங்குல்நிறத் திருநெடுமால் வளையெயிற்றுப்
பெருங்கேழல் வடிவந் தாங்கி
அங்கணில முழுதுமுழு தறிவரிய
கமலமல ரடிகள் சேப்பச்
சங்கணிகைக் குதலைமொழிச் சரவைவிழிப்
பரவையென்பாள் தன்பா லன்பாற்
பொங்கிருளிற் †சந்தரனை நடப்பித்த
சுந்தரனைப் போற்றல் செய்வாம். ௩௦

## புலியூர்ப் புராணம்

முந்தரனைப் பரவையெழு முழுவிடத்தை யாரமுதா முனியா துண்ட, கந்தரனைப் பரவையின்பால் தூதனுப்பிக்

---

* கொசி நோக்கு - அருகிய பார்வை. † சந்து - தூது.

கருணையினாற் கராவின் வாயில், அந்தரனை மகவுடலை யழைப்பித்துத் தமிழ்ப்பாட்டா லருளைச் சேர்ந்த, சுந்தரனைத் தொழுதுளத்தே நினைந்துநினைந் துருகிமலத் துரிசு தீர்வாம்.

## சீர்காழிப் புராணம்

இருக்காதி மறைகாணா இணைத்தாளை மறலிமுடி யிடறுந் தாளைத், திருக்கேள்வன் விழிபுனைந்த செழுந்தாளை யரக்கன்முடி திரித்த தாளை, ஒருக்காலுக் கிருக்காலாய்ப் பரவைமனை யகந்தேடி யுறுமா செய்தோன், மருத்தாழா மலர்ந்ததுணை மலர்த்தாளை யகத்தாழ வணக்கஞ் செய்வாம்.

## சானந்தகணேச புராணம்

அன்றுவன் செங்கலை யம்பொன் னாக்கிய
தென்தமிழ் நாவலன் தீய என்னையுந்
துன்றிய நலந்திகழ் தூய னாக்குவன்
என்றவன் இணையடி யிறைஞ்சு வேனரோ. ௩௩

## திருவாப்பனூர்ப் புராணம்

ஏற்றுயர் கொடிநந் திருமுது குன்றத்
திறைவரைப் பொருள்குறித் தேத்திச்
சாற்றிய பதிக விலையெனத் தனக்குத்
தரும்பொருள் முழுவதும் மணிமுத்
தாற்றினில் வீழ்த்திக் குளத்தினி லெடுத்துப்
பரவையி லன்றுபுக் களித்தோன்
சேற்றினில் விளையாச் செழுமலர்க் கமலச்
சேவடி சென்னிசேர்த் துதுமே. ௩௪

## திருப்பூவணப் புராணம்

காதலுடன் மிகுமின்பக் கடிமணப்பூம்
பந்தரின்கீழ்க் கலைவல் லோர்முன்
மாதவன்போல் வந்திவன்நம் வழித்தொண்டன்
என்றிசைக்கும் வழக்கி னாலே

பாதிமதி நுதற்பரவை யிடையிருளிற்
பங்கயப்பொற் பாதஞ் சேப்பச்
சோதிதனைத் தூதுகொண்ட சுந்தரன்தாள்
சந்ததமுந் தொழுது வாழ்வாம். ௩௫

## மயூரகிரி புராணம்

நம்பினவன் முனிவினுற் பிரிந்தாலுந் தடுத்தாள்வர் நாயன் மாரென், றம்புவியெ லாமறியச் சிவபெருமான் தடுத்தடிய னுக்கி யையஞ், செம்பதுமம் வருந்தநடந் தெடுத்திட்டும் பரவையிடைச் சேர்த்துந் தூதால், இம்பர்மிசை யாளவந்த சுந்தரன்றன் பாதமென திதயத் தாமே. ௩௬

## திருமயிலைப் புராணம்

அறைகழலா ரூரர்தமை மணிமறுகில் தூதுவிடுத்தருளி னுனை, நிறைவழுவாப் பரவைபடிந் துயர்ந்தமுலைக் கிரிசார்ந்து நிலமே லோங்க, முறைதவருத் திருப்பதிக மாரிபொழிந் திடும்புயலை முதிய ஞான, மறையவனை யெமையாளுஞ் செந்தமிழ்ச்சுந் தரனைநிதம் வணக்கஞ் செய்வாம்.

## ஆதிபுரி புராணம்

கடுத்தாளுங் களமறைத்துத் தொடர்ந்துவழக்
குரைத்துநின்று கண்ணிற் காண
எடுத்தாளுஞ் சாதனமுந் தனதையன்
தந்தைகையின் எழுத்துங் காட்டித்
தடுத்தாளும் பெருமான்றன் பதஞ்சேப்பப்
பரவைமனை தனக்குத் தூது
விடுத்தாளு மகிமைபெறு சுந்தரன்தாள்
இணைசிரசின் மேற்கொள் வோமே. ௩௮

## திருவாலங்காட்டுப் புராணம்

சுருதியும் அரியும் வானோர் தொகுதியுந் தொழும்பு பூண்டுங்
கருதியுந் தெளிய மாட்டாக் கடவுளை யிரவி னூடே
ஒருதிரு வனையாள் தன்பால் தூதென வுழல ஏவிப்
பருதியி னுலக நல்கு நம்பிதாள் பரவிச் சேர்வாம். ௩௯

## திருமுருகன்பூண்டிப் புராணம்

தங்க மால்விடைச் சோதியைப் பரவைபால் தூது
சென் றிடச்செய்தும், வெங்க ராவயின் மதலையை யாவ
ரும் வியப்புற வருவித்தும், தொங்க லாரித ழிச்சடைத்
தம்பிரான் தோழனு யருளின்பந், தங்கு பாப்பல பாடிய
சுந்தரன் சரணமஞ் சலிசெய்வாம். ௪௦

## பவானிகூடற் புராணம்

தடுத்தலர் கமல முகிழ்முலைக் கனிவாய்த்
தண்ணகைக் கரியமென் கூந்தல்
வடத்தளி ருதர மரகதப் பசுந்தோள்
மதரரி விழிமலை மடந்தை
இடத்திறை யவனை யிருபதஞ் சிவப்ப
இரவினிற் பரவைபால் தூது
நடத்திய ஆரூர்ச் சுந்தரப் பெருமாள்
நகைமலர்ச் சேவடி தொழுவாம். ௪௧

## கருவூர்ப் புராணம்

வெள்ளியங் கிரியை நீங்கி நாவலூர் மிளிரத் தோன்றி
ஒள்ளிய தோகை பாகன் சாதனத் தோட்டிக் குள்ளாய்த்
தெள்ளிய பரவை யாழ்ந்து சங்கிலி சிமிழ்ப்புற் றுசு
தள்ளிய களிற்றின் பாத தாமரை தலைமேற் கொள்வாம்.

## திருச்சுழியற் புராணம்

வேலாலவ் வரை தடிந்த வித்தகனைப் பெற்றவனைக்
கீலால முடியானைக் கிளர்சனகா தியர்க்கருளும்

பாலால நிழலானைப் பரவைபால் தூதுவிட்ட
ஆலால சுந்தரன்ற னடிக்கமலம் பழிச்சுதுமால். சஙு

### மருதூர்ப் புராணம்

காதுகொண்டு கேட்குமவர்க் கின்ப வெள்ளங்
கரைபுரள மனங்கொண்டு களிக்கின் றோர்கட்
கேதுகொண்ட பாசஇருட் படல நீக்கி
இணையிலருட் சுடரொங்கும் எறிப்ப வெற்பின்
மாதுகொண்ட பாகர்விருப் பாகத் தோன்றி
வரமதுர பாகப்பா மாலை மல்கத்
தூதுகொண்டு நடந்திளைத்த அடியிற் சாத்துஞ்
சுந்தரர்தஞ் சீர்த்தியினைத் துதித்தல் செய்வாம்.

### ஆதித்தபுரி புராணம்

இருமுலைமா மலையின்மணிப் பணிபூட்டிப்
பரவையமு தின்பந் துய்த்தோன்
பருமுறியைக் கிழித்துமறி யலைமுன்ன
மேவியதோர் பயத்திற் போன
ஒருமுதலை வரவழைத்துக் கடனுகத்
தோன்றல்வர வுரைக்கும் பாடல்
தருமுதல்வன் ஆலால சுந்தரன்சே
வடிப்பதுமஞ் சார்ந்து வாழ்வாம். சரு

### திருக்குற்றலப் புராணம்

புவியாசைக் கழைசுழிந்து தலைவரா
வணக்கூடம் புகுந்து பொற்பூண்
தவிராத *கொம்பிரண்டு மேவி†யொரு
வல்லிதொடர் தளையை நீவிக்

---

* கொம்பிரண்டு - பரவையார், சங்கிலியார்.
† ஒரு வல்லி தொடர்தளை - சங்கிலியாரது பற்று.

குவியாரம் புனைபரவை கொங்கையா
  ளையின்பொருட்டுக் குழைதோய் சங்கச்
செவியானைத் தூதுவிட்ட கவியானை
  தனைத்தினமுஞ் சிந்தை செய்வாம். சசு

## திருநெல்வேலிப் புராணம்

கடிகமழ் கொன்றையங் கண்ணி வேய்ந்துவெண்
பொடியணி மேனியன் புகழைப் பாடவே
படிமிசை நாவலம் பதியில் வந்தவர்
அடியிணை சிரமிசை யணிந்து போற்றுவாம். சஎ

## மருதவன புராணம்

*முதலைவள ராறுறு தந்திடவை
  யாறெய்தி முடிவில் லாத
முதலை†நெடுந் தமிழொடுசெந் தமிழ்க்கவிதை
  யாற்றுதித்து மொழி‡யா விக்கண்
முதலையொரு மகவுதரச் செய்துகந்த
  முன்னோனை முகிழ்மென் கொங்கை
‖முதலையிதழ்ப் பரவைமணு ளனைவணங்க
  நமதெண்ண முந்துந் தானே. சஅ

## திருநல்லூர்ப்பெருமணப் புராணம்

பரவையெழு கொடுங்காள விடத்தையெடுத் துண்டோனைப் பாங்கி §ஞெங்கப்,பரவையணி சடையானை நெடிய திரி சூலமெனும் படையி னானைப், பரவையுறு புலவிதனைத்

---

* முது அலைவளர் ஆறு ஆறுதந்திட - முதிய அலைகளோங்கிய காவிரிநதிவழிவிட.

† நெடுந்தமிழ் - மிக்க இனிமை.

‡ ஆவி - மடு. ‖ முதலையிதழ் - செங்கிடைபோலும் அதரம்.

§ ஓங்கு அப்பு அரவையணி சடையான் எனப்பிரிக்க.

தீர்த்துவரு கெனவிடுத்த பண்பி னானைப், பர*வையிரு
நூறுதரந் தினமனமே யுனக்குறுதி பகர்கின் றேனே. சகூ

## மயூராசல புராணம்

அத்தாவென் னுருயிரே யம்பொன்மலை வல்லிபங்கா
அரனே யென்று, வித்தாரம் புகன்றுருகிப் பழிச்சுநருக்
கருள்புரியும் விமலன் கேட்பப், பித்தாவென் றரும்பதிகம்
ஓதுதிரு நாவலூர்ப் பெருமான் தாளை, இத்தேகத் தியாங்
துதிக்க எத்துணைதே கங்கள் தவம் இயன்ற அம்மா. ருo

## திருப்பெருந்துறைப் புராணம்

வரைபல பலபெ யர்த்து மருவுபன் னுள்மு யன்று
புரைபறச் செறித்தோ †ருந்தி கடந்தமால் புந்தி நாணத்
தரைகிழித் தெழுமோ ருந்தி தான்வழி விடமுன் பாடி
விரையவை யாறு மேய விமலர்தாள் சென்னி சேர்ப்பாம்.

## காசிரகசியம்

போகமென் பனவ ருந்தல் பொருந்தன்மற் றவைக ளுள்ள
வாகவோர் பகலி ‡னள்ளு மான்றதோ ரிரவி னள்ளும்
பாகமார்§பதஞ்சென் றேற்றும் பரிந்துசென் றாடல்தீர்த்தும்
ஏகநா யகனே நிற்றற் கியைந்தவர் துணைத்தாள் போற்றி.

## திருநாகைக்காரோண புராணம்

பொறிமறு மார்பத் தண்ணல் வராகமாய்ப் புவியி டந்தும்
அறிவதற் கரிய பாதம் அகன்றுகண் படுக்குந் தேத்து
முறிவறத் தொடர்ந்து வந்து தலைமிசை முயங்கச் செய்த
செறிபெருந் தவத்து நாவற் செம்மலைச் சிந்தை செய்வாம்.

---

* ஐயிருநூறுதரம் பரவு எனப்பிரிக்க.

† உந்தி - கடல்; நதி. ‡ நள் - நடு. § பதம் - அமுது.

## திருக்குடந்தைப் புராணம்

மெய்யமால் களிறு பாய்மா வெறுக்கைமுற் கொடுக்கப் பெற்
வையமேல் தூது போக வழுத்தியுஞ் சிவபிரானுக் [றும்
கையமேற்பான்பேர்க்காக்கியடியவர்க்கெளியானென்னுஞ்
செய்யபேர் நிறுத்து நாவற் செல்வனைச் சேர்ந்து வாழ்வாம்.

## மாயூரப் புராணம்

எண்ணிமாலயன்முன்னோர்குற்றேவல்செய்பெரும்பேறென்று
நண்ணிநா முய்வோ மென்று நாளுங்காத் திருக்க வுள்ள
புண்ணிய முதல்வன் தானே போந்துகுற் றேவல் செய்ய
அண்ணிய தோழ மைப்பா லமைந்தவர்க் கன்பு செய்வாம்.

## உறையூர்ப் புராணம்

மலர்முகமுந் திருப்பாடற் செவ்வாயும்
வெண்ணீறு மாலைத் தோளும்
பலர்புகழு மணிப்பூணும் பரவையார்
முலைச்சுவடு பதிந்த மார்புங்
கலரணுகாப் பெருந்தகையைக் கொண்டுபணி
கொண்டருளக் கதிக்கு மன்பும்
மலர்பணைசூழ் திருநாவல் நம்பிதிருத்
தாளுமுளத் தமைத்து வாழ்வாம். ௫௲

## திருவம்பர்ப் புராணம்

அதிர்சினக் கூற்றுக் கண்டோ ராற்றினுண் முழுகி மேனி
பிதிர்தர வேறு தாங்கிப் பிறங்குவை குந்தஞ் சார்ந்த
கதிர்மணி வண்ணனுணக்காமர்வெண் களிற்றின்மேற்கொண்
டெதிரில்தண் கயிலை சார்ந்தா ரிணையடி முடிமேல் வைப்பாம்.

## திருவாளொளிபுற்றூர்ப் புராணம்

கானகம் பொருந்து முள்ளுங் கல்லுந்தன் காலில் தைப்பத்
தானக நெகிழ்ந்து முன்ற தடஞ்சிலை யிராமன் நாண

மானக வொருமாப் பெற்று மண்சரித் தொருவெள் ளானை
வானகம் புகும்போ தற்ற வள்ளலைச் சரணஞ் சார்வாம்.

## விளத்தோட்டிப் புராணம்

காலத்தே துறந்து மெல்லாங் கைவிடுத் தொழிய நீத்தும்
பாலத்தே விழியா னுண்மை பற்றிடார் வருந்தி நிற்க
வேலத்தேங் குழன்மின் னாரோ ரிருவரோடிருந்துமுண்மைச்
சீலத்தே நின்ற நாவற் செம்மலைச் சிந்தித் துய்வாம். ௫௯

## கோயிலூர்ப் புராணம்

தினமட மாதர் போக முதலிய செயினுந் தீங்கின்
மனமொரு நிலையே நிற்பி னென்பது வயக்கி யாங்குக்
கனமணிக் குழன்மின் னாரோ ரிருவரைக் கலந்து நாளும்
அனகவின் பத்து நீங்கா தமர்பவர்க் கன்பு செய்வாம். ௬௰

## திருக்குறுக்கைப் புராணம்

கதிர்த்தநுதல் வெண்ணீறுந் திருமார்பிற் கத்தூரி கம
ழுஞ் சாந்தும், விதிர்த்தவடி வாள்பொருகட் பரவையார்
முலைச்சுவடும் வேத மேயென், றதிர்த்ததமிழ்ச் செவ்வாயும்
பெருமானே பணிபுரிதற் கமைவான் றீமை, யுதிர்த்ததிருப்
பேரன்பு முடையவா ரூரரடி யுவந்து வாழ்வாம். ௬௧

## தனியூர்ப் புராணம்

ஒன்றுவிண்ணவர்விண்ணாளியொண்மலர்மேயோன்மாயோன்
என்றுகுற் றேவல்கொள்ளு மென்றுகாத் திருந்தேமாறுங்
குன்றுவிற் பிரான்குற் றேவல் குறித்தெழ இறுமாப் புற்று
நன்றுவை கியநன் னாவல் நாவலர்க் கன்பு செய்வாம். ௬௨

## சூதசங்கிதை

மனைப்பாடி யுறியளையுண் டவன்முதல்வா
னவர்க்கரியான் மாண்பொற் பாதம்
வினைப்பாடி கவிநின்றோர்க் கெத்திறத்தும்
எளியதெனல் விளக்கல் போற்றேன்

சினைப்பாடி மிருங்குழலில் வயினிருகால்
தூதேகித் திரும அன்னான்
தனைப்பாடிப் பணிகொண்ட முனைப்பாடி
நாவலவன் சரணஞ் சார்வாம். ௬௩

## திருக்கோவலூர்ப் புராணம்

இன்தொண்டைக்கனிச்செவ்வாயெழிற்பரவைமணம்புணர்ந்து
மென்துண்டக் குளிர்நிலவு விரவுசடை யுடைப்பெருமான்
தன்தொண்டர் தனித்துறவு தரித்ததவக் கிழமைபெறும்
வன்தொண்ட ரடிக்கமலம் மறவாது மனங்கொள்வாம். ௬௪

## புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

அரவையார் மணியல்குற் றடமிலக வளருமிள அன்
னம் போலும், பரவையார் திருமனைக்கெம் பெருமான்றன்
இரண்டுதிருப் பாத நோவ, விரவையார் நடுயாமத் தேவலா
ளாத்தூதுக் கேவு நல்லொப், புரவையார் தோழனெனுஞ்
சுந்தரன்பொன் னடிப ணிந்து போற்று வோமே. ௬௫

## திருவேரகப் புராணம்

ஒருமைத்தமிழ் பித்தாவென வோதுங்கனி வாயாற்
பரவைக்கொரு பித்தாகிய படரைத்தவி ரென்றே
இரவிற்றனி யெம்மானை யிருக்காலுந டத்தும்
அருமைத்துணை யாரூரனை யன்பூரநினைப்பாம். ௬௬

## பழனிப் புராணம்

முடிதடவும் இருவிசும்புந் தடவவொரு மலரடிபார்
முழுது மற்றோர், அடிதடவ வளரரியும் அயனுமறி வரும்
அடியும் முடியும் பாந்தட், கடிதடவல் விளமுலைவாள் நுதற்
பரவை கிரணமணிக் கனக வாசற், படிதடவ விடுந்தமிழ்த்
தெள்ளமுதகவி நாவலன்தாள் பணிதல் செய்வாம். ௬௭

## இதிகாசம். சிவரகசியம்

சேனை மேற்கொண்டு சேரனார் தூசிமுன் செல்ல
வானை மேற்கொண்ட தேவர்கள் வணங்கிடக் கயிலைக்
கானை மேற்கொண்டு சென்றவ னமுதமாங் கவிதைச்
சோனை மேற்கொண்ட சுந்தர முகில்பதந் தொழுவாம். சுஅ

## சாஸ்திரம். சைவசமயநெறி

பிழைப்பித்தே கூற்றான் முதலைவாய்ப் பிள்ளை
அழைப்பித்தார் பாதங்ளைப் பாம். சுகூ

## பரமதத்திமிரபாநு

சேரரொடு சீர்க்கயிலை சேர்ந்துசிவன் தாள்பரவும்
ஊரரடி பாடிநினை வோம். எ0

## சங்கற்பநிராகரணம்

வீட்டியுயிர் முன்முதலை தான்விழுங்கும் பாலகனை
மீட்டவனைத் தாள்பணிவோ மே. எக

## இறைவனூற்பயன்

மோகநா மற்றோ மொழிந்துணியும் வெள்ளானைப்
பாகனா ரூரன் பதம். எஉ

## உருத்திராக்கவிசிட்டம்

முதலை விழுங்கி முடிந்தன்றே போன
மதலைவரப் பாடியமெய் வாக்குக் - கதலிவனஞ்
சூழ்ந்ததிரு நாவலூர்ச் சுந்தரன்பா தந்தொழுதோம்
ஆழ்ந்தழுந்தோம் யாங்களவ லத்து. எங

## சித்தாந்தரிசனம்

வாழ்வா வதுமாய மென்றுரைத்தோன் மாமலர்த்தாள்
தாழ்வாமெப் போதுந் தலை. எச

### சிவபுண்ணியத்தெளிவு

அந்தர மிழிந்தவெள் ளானை மீதுறீஇ
மந்திர வெள்ளிமா மலையி னேகியே
சந்திர சேகரன் சரணஞ் சேர்தமிழ்ச்
சுந்தர னடிமுடி சூட்டு வாமரோ. எரு

---

## சுந்தரர் தேவாரம்

### திருநாவலூர்

**பண் - நட்டராகம்**

திருச்சிற்றம்பலம்

கோவல னான்முகன் வானவர் கோனுங்குற் றேவல்செய்ய
மேவலர் முப்புரந் தீயெழு வித்தவ ரோரம்பினால்
ஏவல னார்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்கொண்ட
நாவல னார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. க

தன்மையி னாலடி யேனைத்தா மாட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்றொண்ட னென்பதோர்வாழ்வுதந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத்தந் தென்னைப்போ கம்புணர்த்த
நன்மையி னார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. உ

வேகங்கொண் டோடிய வெள்விடை யேறியோர் மெல்லியலை, ஆகங்கொண் டார்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்கொண்டார், போகங்கொண் டார் * கடற்கோடியின் மோடியைப்பூண்பதாக, நாகங்கொண் டார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. ங

---

* கடற்கோடி யென்பது - கோடிக்குழக ரென்னுந் தலம். மோடி என்பது அங்ஙனங் கோயில்கொண்டிருக்குந் துர்க்கை.

அஞ்சுங்கொண் டாடுவ ராவினிற் சேவினை யாட்சி
கொண்டார், தஞ்சங்கொண் டாரடித் தண்டியைத் தாமென
வைத்துகந்தார், நெஞ்சங்கொண் டார்வெண்ணெய் நல்
லூரில் வைத்தென்னை யாளுங்கொண்டு, நஞ்சங்கொண்
டார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. ௪

உம்பரார்கோனைத் திண்டோள்முரித்தாருரித்தார்களிற்றைச்
செம்பொனூர் தீவண்ணர்தூவண்ண நீற்றரோராவணத்தால்
எம்பிரா னூர்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்
நம்பிரா னூர்க்கிட மாவது நந்திரு நாவலூரே. [கொண்ட

கோட்டங்கொண் டார்குட மூக்கிலுங் கோவலுங்
கோத்திட்டையும், வேட்டங்கொண் டார்வெண்ணெய் நல்
லூரில் வைத்தென்னை யாளுங்கொண்டார், ஆட்டங்கொண்
டார்தில்லைச் சிற்றம்பலத்தே யருக்கனைமுன், நாட்டங்
கொண் டார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. ௬

தாயவ ளாய்த்தந்தை யாகிச்சாதல் பிறத்தலின்றிப் [த்த
போயக லாமைத்தன் பொன்னடிக் கென்னைப் பொருந்தவை
வேயவ னூர்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்
நாயக னூர்க்கிட மாவது நந்திரு நாவலூரே. [கொண்ட

வாயாடி மாமறை யோதியோர் வேதிய னாகிவந்து
தீயாடி யார்சினக் கேழலின் பின்சென்றோர் வேடுவனாய்
வேயாடி யார்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்
நாயாடி யார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. [கொண்ட

படமாடும் பாம்பணை யானுக்கும் பாவைநல் லாள்தனக்கும்
வடமாடு மால்விடை யேற்றுக்கும் பாகனாய் வந்தொருநாள்
இடமாடி யார்வெண்ணெய் நல்லூரில் வைத்தென்னை யாளுங்
நடமாடி யார்க்கிட மாவது நந்திரு நாவலூரே. [கொண்ட

மிடுக்குண் டென் றேடியோர் வெற்பெடுத் தான்வலி
யைநெரித்தார், அடக்கங்கொண் டாவணங் காட்டிநல் வெண்
ணெயூ ராளுங்கொண்டார், தடுக்கவொண் ணாததோர்
வேழத்தி னையுரித் திட்டுமையை, நடுக்கங்கண் டார்க்கிட
மாவது நந்திரு நாவலூரே. ௧௦

நாதனுக் கூர்நமக் கூர்நர சிங்க முனையரையன்
ஆதரித் தீசனுக் காட்செயு மூரணி நாவலூரென்
றோதநற் றக்கவன் றொண்டனா ரூர னுரைத்ததமிழ்
காதலித் துங்கற்றுங் கேட்பவர் தம்வினை கட்டறுமே. ௧௧

திருச்சிற்றம்பலம்

---

திருநாவலூர் :— நாயன்மார்களது அருமை பெருமைகளைப் பெரியபுராணத்தின் மூலமாக அறிதற்குக் காரணமான சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவதரித்த திருப்பதி. இவரது தாய் தந்தையராகிய இசை ஞானியார், சடைய நாயனார் வாழ்ந்தது. கோயில், திருமால் சன்னிதி யுடன் அமைந்த பெரும்பதி. பண்மயத்த மொழிப் பாவை சங்கிலி யுடன் சுந்தரர் நின்ற சன்னிதி தனியே யுண்டு. திருச்சி—விழுப் புரம் ரயில் பாதையில் இருந்தை ஸ்டேஷனுக்கு இரண்டு மைல். இதன் கிழக்கே 6 மைலில் அப்பர் சுவாமிகள் அவதரித்த திருவாமூர் வுள்ளது. திருநாம நல்லூர் என வழங்கும் இப்பதியில் சுந்தரர் அவதார விழா ஆவணி உத்திரத்திலும், அவதார முதல் முக்தியடைந் தது வரையுள்ள அற்புத ஐதீகங்கள் ஆடி - அஸ்தம், சித்திரை, சுவாதி நட்சத்திரங்களிலும் நடைபெறும். சித்திரை மதியில் சிறப்பு விழா நடைபெறும். பதி அம்மையப்பர் பெயர்கள் வருமாறு :—

அப்பர் - பக்தஜனேஸ்வரர் (வழங்குதல்) நாவலீசுவரர் (நூல் நவல்வது)
அம்மை - மனோன்மணி ,, சுந்தர வல்லி ,,
பதி மரம் - நாவல். பதி புராணம் உடையது.

## பெரிய புராணம்

பெருகிய நலத்தான் மிக்க பெருந்திரு நாடு தன்னில்
அருமறைச் சைவ மோங்க அருளினு லவத ரித்த
மருவிய தவத்தான் மிக்க வளம்பதி வாய்மை குன்றுத்
திருமறை யவர்கள் நீடுந் திருநாவ லூரா மன்றே. க

மாதொரு பாக னுர்க்கு வழிவழி யடிமை செய்யும்
வேதியர் குலத்திற் றேன்றி மேம்படு சடைய னுருக்
கேதமில் கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானி யார்பால்
தீதகன் றுலக முய்யத் திருவவ தாரஞ் செய்தார். உ

—தடுத்தாட்கொண்ட புராணம்.

## திருப்புகழ்

கோலமறை யொத்த மாலைதனி லுற்ற
கோரமதன் விட்ட கணையாலே-
கோதிலத ருக்கள் மேவுபொழி லுற்ற
கோகிலமி குத்த குரலாலே ;
ஆலமென விட்டு வீசுகலை பற்றி
ஆரழலி றைக்கு நிலவாலே-
ஆவிதளர் வுற்று வாடுமெனை நித்த
மாசைகொட ணைக்க வரவேணும் ;
நாலுமறை கற்ற நான்முகனு தித்த
நாரணனு மெச்சு மருகோனே-
நாவலர்ம திக்க வேல்தனையெ டுத்து
நாகமற விட்ட மயில்வீரா ;
சேலெனும் விழிச்சி வேடுவர் சிறுக்கி
சீரணி தனத்தி லணைவோனே-
சீதவயல் சுற்று நாவல்தனி லுற்ற
தேவர்சிறை விட்ட பெருமாளே.

தாயுமானர்

பித்தரிறைவென்றறிந்துபேதைபாற்றாதனுப்பு
வித்ததமிழ்ச்சமர்த்தர்மெய்புகழ்வதெந்நாளோ. க

அற்புதப் பாடல்

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை யழைத்ததும், எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும், மறைக்கத விணைத்திறந்ததும், கன்னித்
தண் தமிழ்ச் சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்.

—திருவிளையாடற் புராணம் - பரஞ்சோதி முனிவர்.

வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதிலிருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட்டு நிற்குமே
செங்க லானது தங்கம தாகுமே
திகழு மாற்றிட்ட செம்பொ னளிக்குமே
துங்க வால்பரி சேரற்கு நல்குமே
துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாடலே. உ

R23 : 41132 4
N18

நால்வர் திருநக்ஷத்திரம்

சித்திரைச் சதயமப்பர் சிறந்தவை காசிமூலம்
அத்தரைப் பணிசம்பந்த ராணிமா மகத்திலந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல் லாடிதன்னிற்
சுத்தமாஞ் சோதிநாளிற் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.

நால்வர் வயது

அப்பருக்கெண் பத்தொன் றருள்வாத வூரருக்குச்
செப்பியநா லெட்டினில் தெய்வீக[illegible] இப்புவியிற்
சுந்தரர்க்கு மூவாறு தொன்ஞா[illegible]
கந்தம் பதினா றறி.

183714
[illegible] 600 008